செய்தி வெளியீடு: 55 நாள்.21.06.2021

2021 ஆம் ஆண்டிற்காக வழங்கப்படும், சுதந்திர தினவிழா விருது பெற, பெண்கள் மேன்மைக்காக சிறந்த சமூக சேவை புரிந்தவர்கள், மற்றும் சமூக சேவை நிறுவனங்கள் கீழ்குறிப்பிட்டுள்ள விதிமுறைகளுக்குட்பட்டு சென்னை மாவட்ட சமூக நல அலவலகத்தில் 25–06–2021 அன்று மாலை 5.45–க்குள் உரிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் காள்ளப்படுகிறது.

1. தமிழ்நாட்டை பிறப்பிடமாகக் கொண்டவராகவும், 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

2. குறைந்தபட்சம் 5 ஆண்டுகள் சமூகநலன் சார்ந்த நடவடிக்கைகள், பெண் குலத்திற்கு பெருமை சேர்க்கும் வகையிலான நடவடிக்கை, மொழி, இனம், பண்பாடு, கலை, அறிவியல், நிர்வாகம் போன்ற துறைகளில் மேன்மையாக பணிபுரிந்து, மகளிர் நலனுக்கு தொண்டாற்றும் வகையில் தொடர்ந்து பணியாற்றும் சமூக சேவகர் மற்றும் சமூக சேவை நிறுவனங்களாக இருத்தல் வேண்டும்.

3. சமூக சேவை நிறுவனம் அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிப்போர் கீழ்க்கண்ட அலுவலகத்தில் விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட சமூக நல அலுவலகம்,
சிங்காரவேலர் மாளிகை,
எட்டாவது தளம், இராஜாஜி சாலை,
சென்னை–01

இத்தகவலை சென்னை மாவட்ட ஆட்சியர் டாக்டர்.ஜெ.விஜயாராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை –01.